DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.81/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | செல்வராஜ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | அப்புகுட்டி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

A1, A3, A4, எதிரிகள் ஆஜர். A2, A5, A6, A7 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, நடராஜபுரத்தில் வசித்து வருகிறேன். நான் பால் கம்பெனி வேலைக்கு சென்று வருகிறேன். தேதி, மாதம் ஞாயபகம் இல்லை. சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பு கோவில் விசேஷத்திற்காக மாயனூர் காவல் நிலையத்திற்கு சென்றேன். அப்பொழுது போலிசார் கையொப்பம் கேட்டார் போட்டேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சண்டை நடந்தது தெரியுமா என்று கேட்டார்கள். நான் காலையில் சென்று மாலையில் தான் வீட்டிற்கு வருவேன் சண்டை நடந்த விவரம் தெரியாது என்று சொன்னார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.06.2021 அன்று பகல் சுமார் 11.30 மணிக்கு மேல் மாயனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் வீரராக்கியத்திலிருந்து நத்தமேடு செல்லும் தார்

ரோட்டில் நடராஜபுரம் சுந்தரலிங்கம் வீட்டின் முன்பு சண்டை நடந்த இடத்தை என் முன்னிலையிலும், சசிக்குமார் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் நான் அப்பொழுது பால் கம்பெனியில் வேலையில் இருந்தேன். மேற்படி, சங்கதிகளை நேரில் பார்த்து போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் கேட்டு கொண்டதால் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 14:57:45 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**